செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 484(5) நாள்: 11/8/17

## தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்

### செய்தி வெளியீடு

### விநாயகர் சிலைகளை நீர் நிலைகளில் கரைப்பதற்கான வழிமுறைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய நல்லாட்சியில் சுற்றுச் சூழலை பாதுகாப்பதில் தொன்றுதொட்டு சிறந்த மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் மக்களாகிய நமக்கு மிகப்பெரிய கடமை இருக்கிறது. நீர் நிலைகள் (கடல், ஆறு மற்றும் குளம்) நமக்கு குடிநீர் ஆதாரத்தை தருகிறது. நீர் நிலைகளை பாதுகாக்கும் வகையில் வருகிற விநாயகர் சதுர்த்தி விழாவினை கொண்டாடும்போது விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மட்டும் கரைத்து சுற்றுச் சூழலை பாதுகாக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, பொது மக்களுக்கு கீழ்கண்டவாறு வேண்டுகோள் விடப்படுகிறது.

1. களிமண்ணால் செய்யப்பட்டதும்/சுடப்படாததும் மற்றும் எவ்வித இரசாயனக் கலவைபற்றதுமான கிழங்கு மாவு மற்றும் மரவள்ளிக்கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசி தொழிற்சாலை கழிவுகள் போன்ற சுற்றுச்சூழலை பாதிக்காத மூலப்பொருட்களால் மட்டுமே செய்யப்பட்டதுமான விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் பாதுகாப்பான முறையில் கரைக்க அனுமதிக்கப்படும்
2. இரசாயன வர்ணம் பூசப்பட்ட விநாயகர் சிலைகளை நீர்நிலைகளில் கரைக்க அனுமதிக்கப்பட மாட்டாது.
3. விநாயகர் சிலைகளை மாவட்ட நிர்வாகத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் கரைக்க அனுமதிக்கப்படும்.

**வேலூர் மாவட்டத்தில் விநாயகர் சிலைகள் கரைப்பதற்காக கண்டறியப்பட்ட நீர்நிலைகள்**

| இடம் | விநாயகர் சிலைகள் கரைப்பதற்காக கண்டறியப்பட்ட நீர்நிலைகள் |
|---|---|
| 1. வேலூர் | சதுப்பேரி, ஊசூர் ஏரி, கருகம்புத்தூர் ஏரி |
| 2. இராணிப்பேட்டை | தண்டலம் ஏரி, புளியந்தாங்கல் ஏரி |
| 3. ஆற்காடு | ஆற்காடு ஏரி மற்றும் வேப்பூர் ஏரி |
| 4. அரக்கோணம் | மங்கம்மாபேட்டை ஏரி, மாவேறு ஏரி |
| 5. குடியாத்தம் | நெல்லூர்பேட்டை ஏரி |
| 6. ஆம்பூர் | சான்றோர்குப்பம் ஏரி |
| 7. வாணியம்பாடி<br>8. திருப்பத்தூர் | பாலாறு மற்றும் பொன்னேரி ஏரி |

விநாயக சதுர்த்தி விழாவினை சுற்றுச்சூழலைப் பாதிக்காதவாறு கொண்டாடும்படி பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர், காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் ஆகியோரை மேலும் விவரங்களுக்கு அணுகலாம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்.